MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

# உளவியல் நோக்கில் கலித்தொகை தலைவி

திருமதி மா.முத்து காயத்ரி,
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
muthugayathri-tam@sfrcollege.edu.in
DOI 10.5281/zenodo.12795741.

**Abstract :**

**Every human being in the world can be subsumed under the general term 'man'. However, if we look closely at every human activity like eating, walking, looking, laughing, thinking, learning, observing, etc., we can realize that different behavior patterns and natures are different in each person. Man's way of behaving towards others and in every situation is called 'behaviour'. Psychology is the field that studies human characteristics and behavior patterns. In this way, this review article takes the thoughts and activities of the heroine in the Sangam literary book, Kaligya, on a psychological basis.**

**Key Words : Kalithogai - Human Behaviour - Psychology**

## முன்னுரை

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனையும் 'மானுடம்' என்ற பொதுப்பண்பில் அடக்கலாம். இருப்பினும் மனிதனின் ஒவ்வொரு செயல்பாடுகளான உண்ணுதல், நடத்தல், பார்த்தல், சிரித்தல், சிந்தித்தல், கற்றல், கவனித்தல் போன்றவற்றை ஆய்ந்து கவனித்தால் ஒவ்வொருவரிடமும் பல்வேறு நடத்தை முறைகளும் இயல்புகளும் வேறுபட்டு காணப்படுகின்றன என்பதை உணர முடியும். மனிதன் ஒருவர் மற்றவரிடமும், ஒவ்வொரு சூழலிலும் நடந்து கொள்ளும் விதம் அல்லது முறை 'நடத்தை'எனப்படும். மனிதப் பண்புகள் அம்மனிதரின் நடத்தை முறைகளை ஆராயும் துறையே உளவியலாகும். அவ்வகையில் சங்க இலக்கிய நூலான கலித்தொகையில் இடம்பெறும் தலைவியின் எண்ணங்களையும் செயல்பாடுகளையும் உளவியல் அடிப்படையில் எடுத்தியம்புவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## உளவியல் - விளக்கம்

உளவியல் என்பதை ஆங்கிலத்தில் 'சைக்காலஜி' என்பர். 'சைக்காலஜி' என்பதன் மூலச்சொல் 'சைக்கிலோகஸ்' என்பதாகும். 'சைக்கி' (கிரேக்கச் சொல்) என்றால் ஆன்மா என்றும்,'லோகஸ்'என்றால் அறிவியல் என்றும் பொருள் கொண்டு, சைக்காலஜி என்பதை 'ஆன்மாவின் அறிவியல்' என்று கூறுவர். ஆன்மாவைப் பற்றிய அறிவியக்கமே உளவியல் என்று தொடக்கக் காலத்தில் உளவியலையும் தத்துவத்தையும் இணைத்துக் கூறியுள்ளனர்.

**"உளவியல் என்பது மனித நடவடிக்கை பற்றிய அறிவியலாகும். மனிதன் தனித்தும் பிறருடன் சேர்ந்தும் எவ்வாறு செயல்படுகிறான் என்பதை அறிவதற்கு அது உதவுகிறது"**[1]

## உளவியற் பிரிவுகள்


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

உள்ளத்தைப் பற்றிக் கூறுவதால் 'உளவியல்' என்றும், 'மனவியல்' என்றும் மனிதனின் நடத்தையைப் பற்றி ஆராய்வதால் 'நடத்தை நூல்' என்றும் பல பெயர்களில் சுட்டப்படுகிறது.

உளவியலானது ஆரம்ப காலத்தில் தத்துவவியலோடு தொடர்பு கொண்டிருந்தது. 19-ஆம் நூற்றாண்டிலேயே தனியாகப் பிரிந்து ஒரு துறையாக வளர்ந்து பல பிரிவுகளைக் கொண்டதாக மாறியது.

- குழந்தை உளவியல்
- இளையோர் உளவியல்
- பிறழ்நிலை உளவியல்
- பொது உளவியல்
- தனியாள் வேற்றுமை உளவியல்
- விலங்கியல் உளவியல்
- உடற்கூற்று உளவியல்
- சமூக உளவியல்
- வளர்ச்சி உளவியல்
- நாட்டுப்புற உளவியல்
- மனத்தொலைத் தொடர்பு உளவியல்
- ஆய்வு முறை உளவியல்
- சோதனை முறை உளவியல்
- நடைமுறை உளவியல்

இவ்வாறு பல்வேறு கிளைகளாக இன்று உளவியல் வளர்ந்தோங்கியுள்ளது.

**கலித்தொகை தலைவியின் மனவுணர்வு**

துன்பத்திலும் இன்பம் காணும் மனவுணர்வு, உளநுட்பச்செயல், மனநோயின் வெளிப்பாடு, வேட்கை உணர்வு, மனக்கோட்டம், பண்பட்ட மனநிலை வெளிப்பாடு, மடைமாற்ற மனநிலை, நம்பிக்கை உணர்வு, இறப்பு இயல்பூக்க மனநிலை, கனவு, அஞ்சும் மனநிலை போன்ற உளவியல் அடிப்படையில் கலித்தொகையில் இடம்பெறும் தலைவியின் மனநிலை விளக்கப்படுகிறது.

**மஸோக்கிஸ மனவுணர்வு**

துன்பத்திலும் இன்பம் காணும் உணர்விற்கு மஸோக்கிஸ மனவுணர்வு என்று பெயர். "**துன்பத்தை எண்ணாமல், துன்பத்திலும் இணைந்திருக்கும் இன்பத்தையே விரும்பும் உள்ளப் பண்பு.**"[2]

தலைவன் செலவுக் குறிப்பு அறிந்து வழியிடைத் துன்பத்திற்குத் துணையாகத் தன்னையும் உடன் அழைத்துக் கொண்டு செல்லுமாறு தலைவி கூறுவதன் மூலம் மஸோக்கிஸ மனவுணர்வு வெளிப்படுவதை,


http://Creativecommons.org//license/by/4.0/.

**“தண்ணீர் பெறாஅத் தடுமாற்று அருந்துயரம்**
**கண்ணீர் நனைக்கும் கடுமைய, காடு என்றால்,**
**என், நீர் அறியாதீர் போல இவை கூறல்?**
**நின் நீர அல்ல, நெடுந்தகாய்! எம்மையும்,**
**அன்பு அறச்சூழாதே, ஆற்றிடை நும்மொடு**
**துன்பம் துணையாக நாடின், அது அல்லது**
**இன்பமும் உண்டோ, எமக்கு?”**[3] - என்ற பாடலடிகள் வாயிலாக உணரலாம்.

**பண்பட்ட மனநிலை வெளிப்பாடு**

ஃபிராய்டு மனத்தின் செயல்பாடுகளை, அதன் ஆளுமை நிலையின் அடிப்படையில் பண்படா உள்ளம், தன் முனைப்பு, பண்பட்ட உள்ளம் என்ற மூன்று நிலைகளாகப் பிரிக்கிறார். இதில் பண்பட்ட உள்ளம் என்றழைக்கப்படும் சூப்பர் ஈகோ, சமுதாயத்திற்கும் சட்டத்திட்டங்களுக்கும் உட்பட்டு இயங்கக்கூடியது.

கலித்தொகை தலைவி கற்பு வாழ்க்கையில், தலைவன் பரத்தையிடம் சென்று வந்த பின் தலைவி, தலைவன் கேட்குமாறு கூறி, தன் மனவுணர்வு, பிரிவுத்துயர் மற்றும் கோபத்தினை வெளிப்படுத்தினாலும் ஏதோ ஒரு வகையில் தலைவனை உறவாகவே கருதுகிறாள். ஏனெனில் அக்காலக்கட்ட சமூக நிலையில் பெண்கள் தங்கள் பாதுகாப்பிற்காகவும் பொருள் தேவைக்காகவும் ஆண்களைச் சார்ந்து வாழ வேண்டிய நிலை இருந்ததால், ‘தான் வளரும் சமுதாயப் பண்பாட்டினைக் கணக்கில் கொண்டு வளர்கின்ற சூப்பர் ஈகோ மனநிலை’ பெற்றிருக்கிறாள், தலைவி. இதனை,

**“கோடுஎழில் அகல் அல்குற் கொடி அன்னார் முலை மூழ்கி**
**பாடுஅழி சாந்தினன், பண்பு இன்றிவரின் எல்லா**
**ஊடுவென் என்பேன்மன்? அந்நிலையே, அவற்காணின்**
**கூடுவென் என்னும் இக்கொள்கை இல் நெஞ்சே”**[4]

என்ற பாடலடிகள் வாயிலாக அறியமுடிகிறது.

**மடைமாற்ற மனநிலை**

இயற்கையாக நிகழும் ஒரு நிகழ்வினை எடுத்துக்கூறி, அதன் வாயிலாக தன் மனத்தின் எண்ணங்களை வெளிப்படுத்துவது மடைமாற்ற மனநிலை ஆகும்.

பொருள்வயிற் பிரிவினை மேற்கொள்ளும் தலைவனை எண்ணும் தலைவி, தலைவன் செல்லும் வழியில் களிறு, புறா, மான் தன் துணையோடு இருப்பதை காணும் போது, தலைவனின் மனப்போக்கு மாறி தன்னை நினைத்து, திரும்பி வருவான் என்று, தன் உள்ள உணர்வினை நேரடியாக வெளிப்படுத்தாமல், இயற்கையாக நிகழ்பவற்றினை கூறி அவற்றின் மூலம் வெளிப்படுத்துவதை,

**“பிரிவு எண்ணிப் பொருள்வயிற் சென்ற நம் காதலர்**
**வருவர் கொல்: வயங்கிழாஅய் ! வலிப்பல், யான் கேளள், இனி**


http://Creativecommons.org//license/by/4.0/.

**அடிதாங்கும் அளவு இன்றி, அழல் அன்ன வெம்மையால்,**
**கடியவே - கனங்குழாஅய்! - காடு என்றார் அக்காட்டுள்,**
**துடிஅடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்**
**பிடி ஊட்டி, பின் உண்ணும், களிறு எனவும் உரைத்தனரே"**[5] என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

**நம்பிக்கை உணர்வு**

மனித மனம் தாம் விரும்பியதை நம்பிக்கையாக ஏற்கிறது. நம்பிக்கையை உளஉருவாக்கம் என்பர்.

**"நம்பிக்கைகள் பெரும்பாலும் இயற்கையின் புதிரான செயல்களை உணர இயலாத போது மனித வாழ்வில் அப்போதைக்கு அப்போது நிகழும் ஊறுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையிலும் தான் எண்ணியதை நிறைவேற்றிக் கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகும் போதும் மனித மனம் சிலவற்றைப் படைத்துத் தனக்குத் தானே காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவையே நம்பிக்கைகளாக உருபெறுகின்றன"**[6]

தலைவன் திரும்பி வருவான் என்று தலைவி எண்ணும் போது பல்லி கத்துதல், இடக்கண் துடித்தல் ஆகிய நன்னிமித்தங்களாக தோன்றின. இவை தலைவியின் நம்பிக்கைக்கு வலுச்சேர்த்தன. அதனால் தலைவியின் எதிர்ப்பார்ப்பு உணர்வு அதிகரித்து நம்பிக்கையுடன் காத்திருந்தாள். இதனை,

**"இனைநலம் உடைய கானம் சென்றோர்**
**புனைநலம் வாட்டுநர் அல்லர் மனைவயின்**
**பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன**
**நல் எழில் உண்கணும் ஆடுமால் இடனே"**[7]

என்ற பாடலடிகள் விவரிக்கின்றன.

**இறப்பு இயல்பூக்க மனநிலை**

மனம் ஒன்றை நினைத்து அவை நிறைவேறாத பொழுது அதனை ஈடுசெய்ய உயிரை நீக்கும் எண்ணம் ஏற்படுகிறது.

**"உயிர் நீக்கும் இயல்பூக்கம் பிறழ்நிலை உளநோய்க்கு வழிவகுப்பன என்பர்"**[8]

தலைவன் தலைவியை பிரிந்து பொருள் தேடச் செல்லும் போது, தலைவி தன்னையும் உடன் அழைத்துக் கொண்டு செல்க என்றனள். தலைவன் அதற்கு உடன்படவில்லை. தலைவி, அவன் பிரிந்தால் தான் இறந்துபடுவேன் என்று தன் மன உணர்வை வெளிப்படுத்தினாள். இதனை,

**"விலங்கு மலை வெம்பிய போக்கு அருவெஞ் சுரம்**
**தனியே இறப்ப யான் ஒழிந்திருத்தல்**
**நகுதக்கன்று இவ் அழுங்கல் ஊர்க்கே இனியான்**
**உண்ணுலும் உண்ணேன் வாழலும் வாழேன்"** [9]


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

**அஞ்சும் மனநிலை**

அஞ்சும் மனநிலையை ஆங்கிலத்தில் ஆங்க்சிட்டி என்பார்கள்.

**"தனக்கோ அல்லது தான் அன்புடன் பழகுபவர்களுக்கோ ஏதாவது அபாயமோ ஆபத்தோ ஏற்பட்டு விடும் என்பன போன்ற கற்பனை உணர்ச்சிகளால் பயந்து கொண்டே பரபரப்புடன் வாழும் ஒரு குணமாகும்"**[10]

தலைவியும் அன்னையும் வீட்டில் இருக்கும் போது, உண்ணும் நீர் வேண்டும் என வந்தான். அன்னையும் பொன்னால் செய்த கரகத்தில் நீரை வார்த்து, நீர் உண்ணச் செய்து வருவாய் என்று சொன்னாள். நீர் உண்பிக்கச் சென்ற போது அவன் தன் வளையலணிந்த முன் கையைப் பிடித்து என்னை நலிவித்தனன். அப்போது தலைவி அஞ்சி, அன்னாய் இவன் செய்ததை பார் என்று அச்சத்தால் அலறித் துடித்தாள்.

**"உண்ணுநீர் வேட்டேன் என வந்தாற்கு, அன்னை,**
**அடர் பொற் சிரகத்தால் வாக்கி, சுடரிழாய்!**
**உண்ணுநீர் ஊட்டிவா என்றாள் என யானும்**
**தன்னை அறியாது சென்றேன் மற்று என்னை**
**வளைமுன் கைபற்றி நலிய தெருமந்திட்டு**
**அன்னாய் இவன் ஒருவன் செய்தது காண் என்றேனா"**[11]

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

**கனவு**

கனவு என்பது விழிப்பு நிலைக்கும் உறக்க நிலைக்கும் இடைநிலையில் உணர்வு தோய்கிற போது உண்டாவதாகும். அடி மனத்தில் தோய்ந்த எண்ணங்களும் எண்ணங்களின் விளைவுகளும் தொடரும் நினைவுகளும் கனவுகளாக வரும் என்பர்.

**"ஆழ்ந்த உறக்கமில்லாத போதே கனவுகள் தோன்றுகின்றன. புறக்கண்ணில் காண்பது நினைவு. அகக்கண்ணில் காண்பது கனவு என்றும் விளக்குவர்."**[12]

நனவு மனம் உணர்ந்து அனுபவித்த எதிர்பார்த்த எண்ணங்களை அல்லது உணர்வுகளைத் துயிலும் போது நனவிலி மனம் மீண்டும் தூண்டி விடுவதால் கனவுகள் வருகின்றன.

**"நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்**
**கண்ட பொழுதே இனிது"**[13]

என்ற குறட்பா விளக்குகின்றன.

**"ஆழ்மன உணர்வுகளின் நிறைவேறாத ஆசைகளே கனவுகளாக வருகின்றன என்கிறார், ஃபிராய்டு"**[14]


http://Creativecommons.org//license/by/4.0/.

நனவிலி மன உணர்வுத் தூண்டுதல்களே கனவுகளை உண்மையாக உருவாக்குகின்றன. ஒடுக்கப்பட்ட நனவு, நனவிலி என்ற இரண்டு மன அமைப்புகளே கனவுகளின் இயக்கக் காரணிகளாகும்.

வரைவிடை வைத்து பிரிவு மேற்கொண்ட தலைவனை கனவில் காணும் தலைவி, தான் எவ்வாறெல்லாம் தலைவனுடன் இன்புற்று இருக்க வேண்டும் என்ற ஆழ்மனநிலையை வெளிப்படுவதை,

**"நனவின்வாராநயனிலாளனைக்**
**கனவில் கண்டு, யான் செய்தது கேள்"[14]**

கலித்தொகையில் ஆறு பாடல்கள் (24, 128, 142, 144, 145, 147) கனவு பற்றியன.

**முடிவுரை**

தலைவியின் மனவுணர்வானது, அதீத அன்பின் காரணமாக துன்பம் என்று கூட பார்க்காமல், துன்பத்திலும் தலைவன் உடனிருக்கும் இன்பத்தையே எண்ணும் மனநிலை, கற்பு கால வாழ்க்கையில் தலைவியின் உள்ளம் மிகவும் மேம்பட்ட (சூப்பர் ஈகோ) உள்ளமாகவும், தலைவி தலைவன் பிரிவின் போது மடைமாற்ற மனநிலை உடையவளாகவும், அதீத நம்பிக்கை உள்ளவளாகவும், தன் நம்பிக்கை வீண்போகும் போது தன் உயிரையும் நீக்கத் துணிக்கும் உள்ளம் படைத்தவளாகவும் நனவில் காண முடியாத தலைவனை கனவு கண்டு மனதை தேற்றிக் கொள்ளும் மனதுடையவளாக கலித்தொகை தலைவி திகழ்கிறாள்.

**சான்றெண் விளக்கம்**

1. எஸ்.பி.ஆதிநாராயணன்,மனித உள்ளம், ப.21
2. கலைமணி.என்.வி,சிக்மண்ட் ஃபிராய்டின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள், ப.17
3. கலித்தொகை,6
4. கலித்தொகை,67
5. கலித்தொகை,11
6. கிருட்டிணமூர்த்தி (ப.ஆ), தமிழரின் மரபுச் செல்வங்கள் ப. 321
7. கலித்தொகை,11
8. கிருட்டிணமூர்த்தி (ப.ஆ), தமிழரின் மரபுச் செல்வங்கள் ப. 145
9. கலித்தொகை,20
10. கலைமணி.என்.வி,சிக்மண்ட் ஃபிராய்டின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள், ப.11
11. கலித்தொகை,51
12. ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியக் கனவுகள், ப.38
13. திருக்குறள், கனவு நிலை உரைத்தல், 1215
14. செ.சாரதாம்பாள், இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், ப.26
15. கலித்தொகை,128


http://Creativecommons.org//license/by/4.0/.